# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம
# திருப்பதிசாரம் - அஞ்சல்
# ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்

## 2018-ம் ஆண்டுக்கான பணித்திட்டம்

| வ.எண். | திட்டமிட்ட பணிகள் | Jan. | Feb | Mar. | April | May | June | July | Aug. | Sep. | Oct. | Nov. | Dec. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஊனமுற்றோர்கள், பெற்றோர்களை சந்தித்தல் | | | | | | | | | | | | |
| 2. | விடுதியில் தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் | | | | | | | | | | | | |
| 3. | மருத்துவ முகாம் நடத்துதல் | | | | | | | | | | | | |
| 4. | சிறப்பு பயிற்சி கொடுப்பதை கவனித்தல் | | | | | | | | | | | | |
| 5. | பெற்றோர் சங்ககூட்டம் நடத்துதல் | | | | | | | | | | | | |
| 6. | ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல் | | | | | | | | | | | | |
| 7. | நன்கொடை வசூலித்தல் | | | | | | | | | | | | |
| 8. | விழாக்கள் கொண்டாடுதல் | | | | | | | | | | | | |
| 9. | கிளை நிறுவனங்களை பார்வையிடுதல் | | | | | | | | | | | | |
| 10. | பணியாளர்கூட்டம், பணி மதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் | | | | | | | | | | | | |
| 11. | பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச் செல்லுதல் | | | | | | | | | | | | |
| 12. | பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல் | | | | | | | | | | | | |
| 13. | பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் | | | | | | | | | | | | |
| 14. | பிற நிறுவனங்களுக்குபயிற்சி கொடுக்க,பயிற்சிபெறசெல்லுதல் | | | | | | | | | | | | |

Prepared by.

Anbaham-2019.

# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம்
# திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்

## 2018-ம் ஆண்டுக்கான பணித்திட்டம்

### 1. ஊனமுற்றோர், பெற்றோர்களை சந்தித்தல்:

ஊனமுற்றோர்கள், மனவளர்ச்சி குன்றிய நபர்கள், ஆதரவற்ற முதியோர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்களை சந்தித்துப் பேசி இல்லங்களில் சேர்க்கப்படுதல்.

### 2. விடுதியில் தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

நமது நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஒவ்வொரு இல்லத்திற்கும் தகுதியான நபர்களை கண்டறிந்து அந்தந்த இல்லங்களில் சேர்த்தல்.

### 3. மருத்துவ முகாம்கள் நடத்துதல்:-

நமது நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஒவ்வொரு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தி மருந்து மாத்திரைகள் கொடுக்க ஆவன செய்தல்.

### மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி

| | | |
|---|---|---|
| பிப்ரவரி | - | பொது மருத்துவ முகாம் |
| ஜீலை | - | தோல் மருத்துவ முகாம் |

**அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர்.**

ஜனவரி - மனநல மருத்துவ முகாம்

மே - பொது மருத்துவ முகாம்

செப்டம்பர் - மனநல மருத்துவ முகாம்

**ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம் - புளியடி.**

ஜீன் - பொது மருத்துவ முகாம்

அக்டோபர் - தோல் மருத்துவ முகாம்

**4. சிறப்பு பயிற்சிகள் கொடுத்தல்:**

நமது சிறப்பு பள்ளியில் தங்கியிருக்கும் மனவளர்ச்சி குன்றிய நபர்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சிகளை வாரம் ஒரு முறை சென்று கவனிக்கப்படும்.

**5. பெற்றோர் சங்க கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:**

**மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி – திருப்பதிசாரம்.**

மார்ச் - 4-ம் தேதி

ஜீலை – 1-ம் தேதி

**ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம் - புளியடி.**

மாாச் - 18-ம் தேதி

ஆகஸ்ட் - 19-ம் தேி

**6. ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்:**

ஓவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் ஒருங்கிணைப்பாளர்களுக்கான கூட்டம் நடத்தப்படும்.

**7. நன்கொடை வசூலித்தல்:**

நமது இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு தேவையான உணவு, உடை, தேவையான பொருள்கள், மருத்துவ வசதிகள் அனைத்தும் நன்கொடையாளர்களிடம் கேட்டு வாங்கப்படும்.

**8. விழாக்கள் கொண்டாடுதல்:**

**மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி – திருப்பதிசாரம்**

ஜனவரி 14 - பொங்கல் விழா,

ஜனவரி 26 - குடியரசு தின விழா.

ஏப்ரல் - பள்ளி ஆண்டு விழா

ஆகஸ்டு 15 - சுதந்திர தின விழா

செப்டம்பர் - விளையாட்டு விழா, சரஸ்வதி பூஜை விழா

நவம்பர் - தீபாவளி, கார்த்திகை தீபம்

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம்:**

ஜனவரி 14 - பொங்கல் விழா,

நவம்பர் - முப்பெரும் விழா (முதியோர் தினம், தீபாவளி, இல்ல ஆண்டுவிழா)

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா.

**ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையம் - புளியடி**

ஜனவரி 26 - குடியரசு தின விழா.

ஏப்ரல் - ஆண்டு விழா

ஆகஸ்டு 15 - சுதந்திர தின விழா

செப்டம்பர் - விளையாட்டு விழா,

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா.

**அன்பகம் மனநோயாளிகள் இல்லம் – ஜேம்ஸ் நகர்**

ஆகஸ்டு - அன்பகம் மனநோயாளிகள் இல்ல ஆண்டுவிழா

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

**9. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்:**

'கார்டு' நிறுவனத்தின் கீழ் செயல்படும் இல்லங்கள் அனைத்தும் வாரம் ஒருமுறை பார்வையிட்டு பணிகளை கவனிக்கப்படும்.

**10. பணியாளர்கள் கூட்டம், பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்**

'கார்டு' நிறுவனங்களின் கீழ் நடைபெறும் ஒவ்வொரு திட்டங்களிலும் செயல்படும் பணிகளை பற்றி திட்டமிடவும் பணிகள் செய்து முடித்ததை மதிப்பீடு செய்யவும் மாதந்தோறும் பணியாளர் கூட்டம், பணிமதிப்பீடு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதில் கலந்து கொள்ளப்படும்.

**11. பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்:**

1. <u>மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி – திருப்பதிசாரம்.</u>

மே மாதம் சுற்றுலா அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

2. <u>ஸ்பாஸ்டி தொழிற் பயிற்சி மையம் - புளியடி</u>

மே மாதம் சுற்றுலா அழைத்துச் செல்லப்படும்.

**12. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்:**

புதிய பணியாளர்கள் எடுக்கும் போது அவர்களுக்கு நிறுவன பணிகள் பற்றி பயிற்சி கொடுக்கப்படும்.

**13. பிற துறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:**

அழைப்புகள் வரும்போது பிற துறை கூட்டங்களில் கலந்து கொள்ளப்படும்.

**14. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க, பயிற்சி பெறச்செல்லுதல்**

அழைப்புகள் வரும்போது பிற நிறுவனங்களுக்கு பயிற்சிகள் கொடுக்கவும் பயிற்சிகள் எடுக்கவும் செல்லப்படும்.

திருப்பதிசாரம்.

05-02-2018.

திட்ட அலுவலர்.

திட்ட இயக்குநர்.

# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம்
# திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத்திட்டம்

## பணிகள் பற்றிய வருட அறிக்கை -2018

குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவுக்குட்பட்ட திருப்பதிசாரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 34 ஆண்டுகளாக பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது. இதில் ஆதரவற்ற ஊனமுற்றோர், முதியோர், நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் 2018-ம் ஆண்டு செய்த பணிகள் பற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கபடுகிறது.

### திட்டத்தின் நோக்கம்:

ஆதரவற்ற ஊனமுற்றவர்களின் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிப்படைவதை தடுக்கவும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி அவர்களும் சமுதாய மக்களுடன் இணைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்தோடு கீழ்கண்ட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1. மேற்கொண்ட திட்டங்கள்:

1. **மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையம் –** திருப்பதிசாரம்.
2. **ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி –** புளியடி, நாகர்கோவில்.

   (மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையம்)
3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம் (பெண்கள்)** - ஆசாரிபள்ளம்
4. **அன்பகம் மனநோயாளிகள் இல்லம் (பெண்கள்) –** ஜேம்ஸ் நகர், முட்டம்
5. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுத் திட்டம்.
6. வளமேம்பாட்டுத்திட்டம்.

ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொண்ட பணிகள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

## 2. மேற்கொண்ட பணிகள்:

1. ஊனமுற்றோர்கள், முதியோர்கள் பெற்றோர்களை சந்தித்தல்.
2. விடுதியில் தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
3. மருத்துவ முகாம் நடத்துதல்
4. தொழிற்பயிற்சி கொடுப்பதை கவனித்தல்
5. பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்துதல்
6. ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்
7. நன்கொடை வசூலித்தல்
8. விழாக்கள் கொண்டாடுதல்
9. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்
10. பணியாளர் கூட்டம், பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
11. பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்
12. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்
13. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
14. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க, பயிற்சி பெற செல்லுதல்.

## 3. திட்டப்பணிகள் யார் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், ஒருங்கிணைப்பாளர்கள், உதவி பணியாளர்கள், விடுதி பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது.

## 4. செய்து முடித்த பணிகள்:

### 1. ஊனமுற்றோர் மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளின் பெற்றோர்களை சந்தித்தல்.

உடல் ஊனமுற்ற பிள்ளைகளையும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளையும் வீடுகளில் சென்று சந்தித்து பேசி அவர்கள் குடும்ப சூழ்நிலையை அறிந்து அதற்கு ஏற்றபடி பயிற்சி கொடுக்கவும், வீட்டில் பிள்ளைகளை தனியாக வைத்து பராமரிக்கும் போது ஏற்படும் சிரமங்களை தவிர்க்கவும் வேண்டி பிள்ளைகளையும், அவர்களின் பெற்றோர்களையும் வீடு வீடாகச்சென்று சந்தித்து பேசப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட 288 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து பேசப்பட்டுள்ளது.

தோவாளை வட்டாரத்திற்குட்பட்ட 113 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து பேசப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

பிற வட்டாரங்களில் பிற பணியாளர்கள் மூலம் 184 பிள்ளைகளையும் அவர்கள் பெற்றோர்களையும் சந்தித்துப் பேசப்பட்டுள்ளது.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இவ்வருடம் வீடுகளில் சென்று சந்தித்த ஊனமுற்றவர்கள், பெற்றோர்கள் விபரம் தெரிவிக்கிறது.**

| வ. எண் | பணியிடம் | சந்தித்த ஊனமுற்றவர்கள் | சந்தித்த பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | நாகர்கோவில் நகராட்சி பகுதி | 288 | 288 |
| 2. | தோவாளை வட்டாரம் மற்றும் பிற பகுதிகள் | 113 | 113 |
| 3. | பணியாளர்கள் மூலம் சந்திக்கப்பட்டவர்கள் | 184 | 184 |
| மொத்தம் | | 585 | 585 |

**2. விடுதி பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்:**

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு புதியதாக செல்வி. துர்கா லெட்சுமி, செல்வி. சுபர்ணா, செல்வி. முத்துலதா, செல்வி. செல்வி, செல்வி. அஜிதா, செல்வி. எழில்ராணி, திருமதி. தாயம்மாள், செல்வி. ஜான்சி ஆகிய 8 பிள்ளைகளை சேர்க்கப்பட்டுள்ளது.

ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு புதியதாக செல்வன். பாபு, செல்வன். கிளமென்ட், செல்வன். நாகராஜன், செல்வன். சபீர் ஜிஸ்திகான், செல்வன். கிஷோர், செல்வன். சுப்பிரமணியன், செல்வன். ஆதிமூலபெருமாள், செல்வன். இசக்கிமுத்து, செல்வன். இராஜேந்திரன், செல்வன். சரவணன், செல்வன். வெள்ளைப்பழம், செல்வன். ராஜேஷ், செல்வன். கோயில்பிள்ளை, செல்வன். லியோ பெனீஷ் ராஜ், செல்வன். கணேசன் ஆகிய 15 மாணவர்களை புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

அன்பகம் மனநோயாளிகள் இல்லத்தில் இந்த ஆண்டு திருமதி. டேவிட் லீலா, செல்வி. சிவம், திருமதி. மேரி மெற்றில் ஜெயா, செல்வி. லீலா, திருமதி. தாணம்மாள், திருமதி. நிர்மலா பாத்திமா, செல்வி. இசக்கியம்மாள், செல்வி. சரண்யா, திருமதி. விஜிதா, திருமதி. சீதை, திருமதி. ராணிலெட்,



Scanned with CamScanner

திருமதி. பவானி, திருமதி. எஸ்தர் கிருபா ராணி, திருமதி. மரிய அற்புதம், திருமதி. ஞான செல்வி பாலஸ், திருமதி. தேன்மொழி, திருமதி. சாந்தி, திருமதி. ஞானசெல்வி, திருமதி. ஷீபா, செல்வி. சுனிதா, திருமதி. மாரியம்மாள், செல்வி. பேச்சியம்மாள், செல்வி. முத்தம்மாள், செல்வி. எழில்ராணி, திருமதி. ஸ்ரீ தேவி, செல்வி. உலகம்மாள், செல்வி. தேவகுமாரி ஆகிய 27 நபர்களை புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் இந்த ஆண்டு திருமதி. தங்கம், திருமதி. மணி, திருமதி. அன்னபாய், திருமதி. பாரதி அம்மா, திருமதி. புஷ்பம் ஆகிய 5 முதியோர்களை புதியதாக இல்லத்தில் சேர்க்கப்பட்டது.

**<u>இந்த வருடம் புதியதாக நமது இல்லங்களில் சேர்க்கப்பட்டவர்கள் விபரம்</u>**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | புதியதாக சேர்க்கப்பட்டவர்கள் |
|---|---|---|
| 1. | SMR | 8 பேர் |
| 2. | SPASTI | 15 பேர் |
| 3. | GSHA | 14 பேர் |
| 4. | ANBALAYA | 27 பேர் |
| Total | | 64 பேர் |

## <u>3. மருத்துவ முகாம் நடத்துதல்:</u>

**மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம்:**

19-01-2018 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மைய மாணவிகளுக்கு Dr. பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவகுழுவினரால் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில் பார்வை குறைபாடுடைய 5 மாணவிகளுக்கு கண் கண்ணாடியும், 33 மாணவிகளுக்கு சொட்டுமருந்து மற்றும் மாத்திரைகளும் கொடுக்கப்பட்டது.

26-10-2018 அன்று கோட்டாறு அரசு ஆயுர்வேதா மருத்துவ கல்லூரி மருத்துவர்களால் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டு தேவையான மருந்து மாத்திரையும் வழங்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

ஸ்பாஸ்டிக் சென்டர் ஆஃப் கன்னியாகுமரி:

22-01-2018 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மைய மாணவர்களுக்கு Dr. பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவகுழுவினரால் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. தேவையான மாணவர்களுக்கு சொட்டு மருந்து, மாத்திரைகள், கண்கண்ணாடிகள் வழங்கப்பட்டது. 48 மாணவர்கள் பயனடைந்தார்கள்.

நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

25-01-2018 அன்று நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் வைத்து Dr. பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவகுழுவினரால் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில் தேவையான முதியோர்களுக்கு கண் கண்ணாடி மற்றும் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது. 24 முதியோர்கள் பயனடைந்தார்கள்.

## இவ்வருடம் நடைபெற்ற மருத்துவ முகாம்கள் மற்றும் பயனடைந்தவர்களின் விபரம்

| வ. எண் | சிறப்பு இல்லங்கள் | தேதி | மருத்துவ முகாம் | பயனடைந்தவர்கள் |
|---|---|---|---|---|
| 1. | SMR | 19-01-2018<br>26-10-2018 | கண் மருத்துவ முகாம்<br>பொது மருத்துவ முகாம் | 33<br>33 |
| 2. | SPASTI | 22-01-2018 | கண் மருத்துவ முகாம் | 48 |
| 3. | GSHA | 25-01-2018 | கண் மருத்துவ முகாம் | 24 |
| | | **Total** | | **138** |

## 4. தொழிற்பயிற்சி கொடுப்பதை கவனித்தல்:

மனவளர்ச்சி குன்றிய மாணவ, மாணவிகளின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுவதை தடுக்கவும், தன்னுடைய சுய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மைய மாணவர்களுக்கு ஆடு, கோழி பராமரித்தல், தோட்டம் அமைத்து தண்ணீர் ஊற்றுதல், பேப்பர் கவர் ஒட்டுதல் போன்ற தொழிற்பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டு பயிற்சி,



Scanned with CamScanner

நடன பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 63 மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள்.

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மைய மாணவிகளுக்கு வாரியலுக்கு ஈக்கில் எடுக்கவும், ஆடு, கோழி பராமரிக்கவும், பூமாலைகள் செய்யவும், பயிற்சிகள் கொடுக்கப்பட்டு செய்து வருகிறார்கள். இதில் 38 மாணவிகள் பயனடைந்துள்ளார்கள்.

அன்பகம் மனநோயாளிகள் இல்லத்தில் உள்ள பெண்களுக்கு வாரியலுக்கு ஈக்கில் எடுக்கவும், துணி தைக்கவும், பேப்பர் கவர் ஒட்டவும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு செய்து வருகிறார்கள். 42 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

**இவ்வருடம் தொழிற்பயிற்சி பெற்றவர்களின் விபரம்**

| வ. எண் | சிறப்பு தொழிற்பயிற்சி மையத்தின் பெயர் | தொழிற்பயிற்சி பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையம் – புளியடி | 63 |
| 2. | மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம் - திருப்பதிசாரம் | 38 |
| 3. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம், ஜேம்ஸ் நகர் - முட்டம் | 42 |
| | **மொத்தம்** | **143** |

## 5. பெற்றோர் சங்க கூட்டம் நடத்துதல்:

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு 2 பெற்றோர் சங்க கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் 24 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

"ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு 2 பெற்றோர் சங்க கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் 47 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

அன்பகம் மனநோயாளிகள் இல்லம் முட்டத்தில் இந்த ஆண்டு ஒரு பெற்றோர் சங்க கூட்டம் நடைபெற்றுள்ளது. 20 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

Scanned with CamScanner

<u>இவ்வருடம் சிறப்பு இல்லத்தில் நடைபெற்ற பெற்றோர் சங்க கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் விபரம்</u>

| வ. எண் | சிறப்பு இல்லத்தின் பெயர் | நடைபெற்ற பெற்றோர் சங்க கூட்டங்கள் | கலந்து கொண்ட பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையம் - புளியடி | 2 | 47 |
| 2. | மனவளர்ச்சி குன்றியோர் தொழிற் பயிற்சி மையம் - திருப்பதிசாரம். | 2 | 24 |
| 3. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - முட்டம். | 1 | 20 |
| | மொத்தம் | 5 | 91 |

## 6. <u>ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்:</u>

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் பணிபுரியும் திட்ட ஒருங்கிணைப்பாளர் களுக்கும் ஒவ்வொரு மாதமும் தங்கள் திட்டத்தின் கீழ் என்னென்ன பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதை பற்றி மதிப்பீடு செய்யவும், அடுத்த மாதம் செய்ய வேண்டிய பணிகளை திட்டமிடவும், பணியில் ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் வேண்டி மாதம் தோறும் முதல் சனிக்கிழமைகளில் ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 9 ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடைபெற்றுள்ளது.

## <u>7. நன்கொடை வசூலித்தல்:</u>

நமது சிறப்பு இல்லங்களில் தங்கி பராமரிப்பு, சிறப்பு பயிற்சி பெற்று வரும் நபர்களுக்கு தேவையான உணவு, உடை, மருத்துவ வசதிகள் அனைத்தும் உள்ளூர் நன்கொடையாளர்களிடமிருந்து பணமாகவும், பொருளாகவும் வாங்கி நடத்தப்பட்டு வருகிறது.

"ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையத்திற்கு இந்த ஆண்டு ஒரு நேர உணவாக 417 நபர்களும், ஒரு நாள் உணவாக 25 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ.1,43,500 கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

Scanned with CamScanner

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்திற்கு இந்த ஆண்டு ஒரு நேர உணவாக 1019 நபர்களும், ஒருநாள் உணவாக 21 நபர்களும் நன்கொடையாக ரூ. 2,36,010/- கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

அன்பகம் மனநோயாளிகள் இல்லத்திற்கு ஒரு நேர உணவாக 61 நபர்களும், ஒருநாள் உணவாக 1 நபரும், ஒரு நேர தேனீர், தின்பண்டம் 7 நபர்களும் நன்கொடையாக ரூ.1700/-ம் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு ஒருநேர உணவாக 131 நபர்களும், ஒருநாள் உணவாக 4 நபர்களும் நன்கொடையாக ரூ.12,000/ -ம், கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

**இந்த ஆண்டு உணவு மற்றும் பணம் நன்கொடை விபரம் இல்லங்கள் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒருநேர உணவாக வழங்கியவர்கள் | 1 நாள் (மூன்று வேளை)உணவாக வழங்கியவர்கள் | நன்கொடை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம் – திருப்பதிசாரம் | 1019 | 21 | ரூ.2,36,010/- |
| 2. | 'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையம் - புளியடி. | 417 | 25 | ரூ.1,43,500/- |
| 3. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம் | 131 | 4 | ரூ.12000/- |
| 4. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர், முட்டம் | 61 | 1 | ரூ.1700/- |

**பொருளாக கொடுத்து உதவி செய்தவர்களின் விபரம்:-**

**'ஸ்பாஸ்டி' தொழிற் பயிற்சி மையம் - புளியடி:**

17-01-2018 அன்று பள்ளிவிளை விண்மீன் டிரஸ்ட் சார்பில் ஒரு Fridge வாங்கி கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

Scanned with CamScanner

10-06-2018 அன்று திரு. ரவி கிருஷ்ணன் கோயில் அவர்கள் ஒரு சிறிய மேஜை கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

15-08-2018 அன்று இராமன்புதூர் சமூக சேவை நற்பணி மன்றம் சார்பில் பெட்சீட் மற்றும் சைமன்நகர் நேதாஜி இளைஞர் சங்கம் சார்பில் கடிதார் தந்து உதவி செய்துள்ளார்கள்.

24-10-2018 அன்று Civil Engineering Association சார்பில் ஒரு ஸ்டீல் கட்டில் வாங்கி கொடுத்துள்ளார்கள்.

23-11-2018 அன்று திரு. வேதானந்த் இஞ்ஜினியர் அவர்கள் ஒரு இட்டலி குட்டுவம் தந்து உதவி செய்துள்ளார்கள்.

31-12-2018 அன்று கலுங்கடியைச் சேர்ந்த திரு. சதீஷ் மோகன் அவர்கள் பிள்ளைகளுக்கு 55 T சர்ட் வாங்கி கொடுத்துள்ளார்கள்.

<u>மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம் - திருப்பதிசாரம்</u>

03-01-2018 அன்று வடசேரியைச் சேர்ந்த திரு. நடராஜன் அவர்கள் ஒரு Wheel Chair வாங்கி கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

17-01-2018 அன்று ரோகினி சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் ஒரு குக்கர், ஒரு Hot Box, ஒரு தேங்காய் உரிக்கும் கம்பி மற்றும் பிளாஸ்டிக் பக்கெட் ஆகியவையும், 26-01-2018 அன்று Tamilnadu Court Employers நாகர்கோவில் சார்பாக 13 பிளாஸ்டிக் செயரும், 28-01-2018 அன்று கோட்டாரைச் சேர்ந்த திரு. ஐயப்பன் அவர்கள் ஒரு Gas Stove-ம்,

03-2-2018 அன்று குலசேகரன் புதூரைச் சேர்ந்த திரு. சிவகுமார் அவர்கள் ஒரு மிக்ஸியும், 16-02-2018 அன்று அனந்தபத்மனாபபுரத்தைச் சேர்ந்த திரு. அபினேஷ் அவர்கள் மிக்சி -1, Hot Box-1, Tube Light Set -5ம்,

27-04-2019 அன்று திருப்பதிசாரம் திரு. ராம் ஹர்சித் அவர்கள் 4 பிளாஸ்டிக் செயரும்,

03-05-2018 அன்று திருவேங்குடியைச் சேர்ந்த திரு. முத்து அவர்கள் 5 டியூப்லைட் செட்டும், 05-05-2018 அன்று திரு. மோகன் அவர்கள் Cooker, Tea Cup Set, சில்வர் பாத்திரங்கள், தலையணை ஆகியவையும், 22-05-2018 அன்று கிறிஸ்டோபர் நகர் திருமதி. சுபிதா ஷாஜினி அவர்கள் டவ்வலும், 29-05-2018 அன்று கோட்டாரைச் சேர்ந்த திரு. அர்ஜீன் பகவத் அவர்கள் 0.5 மோட்டார் -1, பிளாஸ்டிக் செயர் 30-ம்,



Scanned with CamScanner

08-06-2018 அன்று கல்பாக்கத்தைச் சேர்ந்த Er. L. டேவிட் ஹெர்பட் அவர்கள் 38 நைட்டியும்,

02-07-2018 அன்று கிருஷ்ணன் கோயில் திரு. ராஜா அவர்கள் கட்டில் வாங்க ரூ.4500/-ம், 13-07-2018 அன்று தேரேகால்புதூர் திரு. ஜெயமோகன் பிள்ளை அவர்கள் 5 நைட்டி, Shampoo-ம், 06-07-2018 அன்று இறச்சகுளத்தைச் சேர்ந்த திரு. ஜெயகிருஷ்ணன் அவர்கள் Nagercoil Rotary Club of Yarn City மூலம் 2 மின்விசிறியும், ராமவர்மபுரம் Rotary Club of Suburban சார்பாக பெட்சீட்டும், 13-07-2018 அன்று Chennai Red Cross Society சார்பாக Buckets, Bedsheet, T-shirt, வேஷ்டி, சாரி, கொசுவலை, Towel ஆகியவையும்,

08-08-2018 அன்று K.P. Road திரு. வேல்முருகன் அவர்கள் 6 பிளாஸ்டிக் செயரும், 18-08-2018 அன்று அழகப்பபுரத்தைச் சேர்ந்த திருமதி. ஆனிஜென்னி மார்க் அவர்கள் கட்டில் -1-ம், மெத்தை 1-ம், 28-08-2018 அன்று கோட்டாரைச் சேர்ந்த திருமதி. பிரக்னா ஸ்ரீகணேஷ் அவர்கள் Ceiling Fan-1-ம், சில்வர்வாளி -2-ம்,

09-09-2018 அன்று இராஜாக்கமங்கலம் துறை அன்னை தெரசா அறக்கட்டளை சார்பாக Nighty, TV, மளிகை பொருள்கள், பாத்திரங்கள் ஆகியவையும்,

02-10-2018 அன்று திட்டுவிளையைச் சேர்ந்த திருமதி. இராஜேஸ்வரி அவர்கள் Night Dress -2 -ம், Nighty -6 -ம், Half pant -ம், 15-10-2018 அன்று திரு. T.N. பாலசுப்பிரமணியன் அவர்கள் Toilet கட்டியும் தந்தார்கள்.

10-11-2018 அன்று தேரூர் Isha Vidhya Hr. Sec. School சார்பாக Soap, Paste, Saree, Towel, Biscuit, பாத்திரம், Surf ஆகியவையும், 26-11-2018 அன்று ஆசாரிபள்ளத்தைச் சேர்ந்த திரு. சதீஷ் அவர்கள் Fridge-ம்,

17-12-2018 அன்று வழுக்கம்பாறை St. Tresa Met. Hr. Sec. School சார்பாக Biscuit, மளிகை, 25 கிலோ அரிசி, 2 Dress, 3 Towel, Soap, Paste ஆகியவையும், 30-12-2018 அன்று ஜோ டேனியல் தெருவைச் சேர்ந்த திரு. ஆனந் அவர்கள் Soap, Paste, Dettol, Vim liquid, Napkin ஆகியவையும் தந்து உதவிசெய்தார்கள்.



Scanned with CamScanner

மேலும் பலர் அரிசி, மளிகை பொருள்கள், காய்கறிகள், சோப்பு, எண்ணெய், பவுடர், தின்பண்டங்கள், இனிப்புகள், பழங்கள், போன்ற பொருள்களும், மாதந்தோறும் Dr. சுப்பிரமணியம் (பாரதி கிளினிக்) அவர்கள் கோதுமை மாவும், சேமியாவும், திரு. முருகேசன் கிருஷ்ணன் கோயில் அவர்கள் உழுந்து, பயறு ஆகியவையும் கொடுத்து உதவி செய்து வருகிறார்கள்.

__நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:__

கோட்டாரை சேர்ந்த திரு. மரியதாஸ் அவர்கள் ஒவ்வொரு மாதமும் மளிகை, பயறு, கடலை ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்து வருகிறார்கள்.

ஆசாரிபள்ளத்தை சேர்ந்த திருமதி. சபிதா ஆன்றோ அவர்கள் ஒவ்வொரு மாதமும் 5 கிலோ சீனி வாங்கி தந்து உதவி செய்து வருகிறார்கள்.

இளங்கடையைச் சேர்ந்த திருமதி. ஜாஸ்பின் அவர்கள் 21 நைட்டி வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

பள்ளவிளையைச் சேர்ந்த திரு. வினித், திரு. ஜெரால்டு ஆகியோர் சேர்ந்து 1 DVD Player வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

கோட்டாரைச் சேர்ந்த திரு. மரியமிக்கேல் அவர்கள் சோப், எண்ணெய் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

கோட்டாரைச் சேர்ந்த திருமதி. வசந்தா அவர்கள் Water Heater-1 வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

மேலப்பெருவிளையைச் சேர்ந்த திருமதி. ஏஞ்சல் லூர்துமேரி அவர்கள் சுடிதார்-1, சாரி-3, நைட்டி-17, சோப் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

வடிவீஸ்வரத்தை சேர்ந்த திருமதி. பிரியா அவர்கள் Fridge -1 வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

தம்மத்து கோணத்தை சேர்ந்த திருமதி. சந்திரா அவர்கள் காய்கறி, Biscuit, Snacks வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

ரோட்டரி கிளப் சார்பாக திரு. பகவத்சிங் அவர்கள் Rubber Sheet-1, Thermometer-1, B.P.Apparatus-1 வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

குளச்சலைச் சேர்ந்த திரு. முகமது அலி அவர்கள் Surf, Soap, Paste, Brush, Powder, Dettol, Blub, Biscuit ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.



Scanned with CamScanner

கோணத்தைச் சேர்ந்த திருமதி. ஜேசு ரெத்தினம் அவர்கள் Dettol, Coconut oil, Soap, Surf ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

தக்கலையைச் சேர்ந்த திருமதி. ஜெனட் அவர்கள் சோப் மற்றும் எண்ணெய் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

பள்ளவிளையைச் சேர்ந்த திருமதி. கிளீட்டஸ் அவர்கள் மளிகை பொருட்கள் Surf, Soap ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

கோணத்தைச் சேர்ந்த திருமதி. மேரி றோஸ் 21 Bedsheet வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

ஆப்பிகோட்டை சேர்ந்த திரு. லாசர் அவர்கள் 15 கிலோ அரிசி வாங்கி தந்து உதவி செய்தார்கள். ஆசாரிபள்ளத்தைச் சேர்ந்த திரு. அம்புறோஸ் அவர்கள் 25 கிலோ அரிசி வாங்கி தந்து உதவி செய்தார்கள். சூரங்குடியைச் சேர்ந்த திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் 50 கிலோ அரிசி வாங்கி தந்து உதவி செய்தார்கள். ஆசாரிபள்ளத்தைச் சேர்ந்த திரு. ஹரன்வைபை அவர்கள் 30 கிலோ அரிசி வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

Little Kingdom School Asaripallam மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் Rice, Wheat flour, Soap, Brush, Oil, Paste, Nighties, Sugar, Towel, Bed sheet, Bru, Bucket, Mug ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

குருசடியைச் சேர்ந்த திருமதி. ஜுலியஸ் அவர்கள் செம்பு -2, Bowl -11 வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

நேசமணி நகரைச் சேர்ந்த திரு. ஜெப் ஆண்டர்சன் அவர்கள் 40 பன் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

<u>அன்பகம் மனநோயாளிகள் இல்லம்:</u>

25-03-2018 அன்று நாகர்கோவில் திரு. சேவியர் அவர்கள் ரோகிணி டிரஸ்ட் வாயிலாக நைட்டி, டவ்வல் ஆகியவையும்.

01-06-2018 அன்று M.S. Road திரு. அர்னால்டு அரசு அவர்கள் 14 நைட்டியும், 26-06-2018 மாங்குழி திரு. லாரன்ஸ் அவர்கள் 12 நைட்டியும்,

28-07-2018 அன்று ரீத்தாபுரத்தைச் சேர்ந்த திரு. ஆன்றோசுனில்குமார் 10 நைட்டி, 10 டவ்வல் ஆகியவையும்,

Scanned with CamScanner

17-11-2018 அன்று கடியபட்டணம் 12-வது அன்பியம் வாயிலாக 30 நைட்டியும், 24-11-2018 அன்று கடியப்பட்டணம், திருமதி. பேட்ரஸ் அவர்கள் Washing soap, Bathing Soap, Coconut oil ஆகியவையும், 25-11-2018 அன்று தெருவுக்கடை ஆலய பெண்கள் சங்கம் வாயிலாக Soap, Oil, Brush, Paste ஆகியவையும்,

15-12-2018 அன்று மேல கிருஷ்ணன்புதூர் ஆலய பெண்கள் சங்கம் சார்பாக 27 நைட்டியும், 23-12-2018 அன்று நெய்யூர் திரு. சுபின்ராஜ் அவர்கள் 10 பிளாஸ்டிக் செயரும், 24-12-2018 அன்று முட்டம் திரு. பெர்க்மான்ஸ் அவர்கள் 10 பாவாடையும், மாங்குழி திரு. லாரன்ஸ் அவர்கள் 27 நைட்டியும், 2 சாரியும், 28-12-2018 அன்று நாகர்கோவில் Rotary Club of Nagercoil Queens அவர்கள் மூலம் 27 சாரியும், 31-12-2018 அன்று ஜேம்ஸ்நகர் திரு. அமலன் அவர்கள் 27 நைட்டியும் தந்து உதவி செய்துள்ளார்கள்.

## 8. விழாக்கள் கொண்டாடுதல்:

மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள், மனநோயாளிகள், முதியோர்கள் ஆகியோரின் திறன்களையும், திறமைகளையும் வெளிக்கொணரவும் பல்வேறு விழாக்களின் வித்தியாசம் காணவும் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கொண்டாடப்பட்ட விழாக்கள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 1. மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம் - திருப்பதிசாரம்:

14-01-2018 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

26-01-2018 அன்று குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் இந்து கல்லூரி பேராசிரியர் ஓய்வு திரு. நீலகண்ட பிள்ளை அவர்கள் கலந்து கொண்டு குடியரசு தினவிழா தேசிய கொடியேற்றி வைத்து சிறப்புரை வழங்கினார்கள்.

20-04-2018 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் லண்டன் மிஷன் சபை போதகர் Rev. கேனாஸ் சாலமன் அவர்களும், திருப்பதிசாரம் பெடரல் வங்கி மேலாளர் திரு. ரெஜி சாக்கோ அவர்களும், திரு. காந்தன், திருமதி. விமலராணி ஆசிரியை ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



Scanned with CamScanner

15-08-2018 அன்று சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக தேரேகால்புதூரைச் சேர்ந்த திரு. சுபாஸ் சந்திரபோஸ் (இந்தியன் வங்கி மேலாளர் ஓய்வு) அவர்கள் கலந்து கொண்டு சுதந்திர கொடியேற்றி வைத்து வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

22-09-2018 அன்று விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக திரு. கணேஷ் ISRO மகேந்திர கிரி அவர்களும், திரு. விஜய் மணவாளன் அவர்களும், திரு. காந்தன் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

19-12-2018 அன்று கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக சுருளகோடு பங்குதந்தை Rev. Fr. தாமஸ் அவர்களும், Rev. Fr. செல்வராஜ் அவர்களும், தேரேகால்புதூர் Dr. சுப்பிரமணியம் BDS அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

**<u>இவ்வருடம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் தேதிவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.</u>**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2018 | பொங்கல் விழா. |
| 2. | 26-01-2018 | குடியரசு தின விழா. |
| 3. | 20-04-2018 | சிறப்பு பள்ளி ஆண்டுவிழா. |
| 4. | 15-08-2018 | சுதந்திர தின விழா. |
| 5. | 22-09-2018 | விளையாட்டு விழா. |
| 6. | 19-12-2018 | கிறிஸ்மஸ் விழா |

2. **<u>ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆஃப் கன்னியாகுமரி - புளியடி</u>**

26-01-2018 அன்று குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது.

26-04-2018 அன்று ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஆயர் Rev. பீட்டர் ரெமிஜியூஸ் அவர்களும், பூதப்பாண்டி PWD இஞ்சினியர் திரு. வேத அருள் சேகர், கன்னியாகுமரி சட்ட மன்ற தொகுதி உறுப்பினர் திரு. ஆஸ்டின் (MLA), தொழிலதிபர் திரு. செல்வராஜ் (கலுங்கடி) ஆகியோர்களும், திருமதி. ரமணி ராஜேந்திரன் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

Scanned with CamScanner

15-08-2018 அன்று சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

22-09-2018 அன்று விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது.

20-12-2018 அன்று கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக Rev. Fr. ஹென்சன், Rev. Fr. சிங்காராயன் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி சிறப்பித்தார்கள்.

**ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம் தேதிவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 26-01-2018 | குடியரசு தின விழா. |
| 2. | 26-04-2018 | சிறப்பு பள்ளி ஆண்டு விழா. |
| 3. | 15-08-2018 | சுதந்திர தின விழா. |
| 4. | 22-09-2018 | விளையாட்டு விழா. |
| 5. | 20-12-2018 | கிறிஸ்மஸ் விழா |

3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம்.**

14-01-2018 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

22.12.2018 அன்று Rev. Sr. மிக்கேலம்மாள், திரு. பகவத்சிங், திட்ட இயக்குனர் ஆகியோர் தலைமையில் கிறிஸ்மஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2018 | பொங்கல் விழா. |
| 2. | 22-12-2018 | கிறிஸ்மஸ் விழா. |

Scanned with CamScanner

4. அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - முட்டம்

14-01-2018 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

15-09-2018 அன்று ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக குளச்சல் சட்ட மன்ற உறுப்பினர் திரு. பிரின்ஸ் (MLA) அவர்களும், முட்டம் பங்கு பேரவை துணைத்தலைவர், கடியப்பட்டணம் பங்கு பணியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

21-12-2018 அன்று கிறிஸ்மஸ் விழா கெண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக Rev. Sr. விக்டோரியா அவர்களும், கடியப்பட்டணம் மீனவர் முன்னேற்ற சங்க தலைவர் திரு. பீட்டர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**அன்பகம் மனநோயாளிகள் இல்லத்தில் நடைபெற்ற விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2018 | பொங்கல் விழா. |
| 2. | 15-09-2018 | ஆண்டு விழா. |
| 3. | 21-12-2018 | கிறிஸ்மஸ் விழா |

## 9. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்:

“கார்டு” நிறுவனத்தின் கீழ் செயல்பட்டுவரும் மனவளர்ச்சி குன்றிய ஆண் மற்றும் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையங்களை வாரந்தோறும் பார்வையிட்டு பணிகளை சிறப்பாக செய்ய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

## 10. பணியாளர்கள் கூட்டம் நடத்துதல்:

ஒவ்வொரு திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களும் தங்களுடைய பணிகளை திட்டமிட்டு செய்வதற்கும், செய்த பணிகளை ஆராய்ந்து பணியில் உள்ள நிறை, குறைகளை அறிந்து குறைகளை நிவர்த்தி செய்து பணிகளை சிறப்பாக செய்ய வேண்டி மாதம்தோறும் பணியாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு ‘ஸ்பாஸ்டி’ தொழிற்பயிற்சி மையத்தில் 9 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

Scanned with CamScanner

மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம் திருப்பதிசாரத்தில் 10 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லம் ஆசாரிபள்ளத்தில் இந்த ஆண்டு 9 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

'அன்பகம்' மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர் முட்டத்தில் 10 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

**இவ்வருடம் ஒவ்வொரு தொழிற்பயிற்சி மையத்திலும் நடைபெற்ற பணியாளர்கள் கூட்டங்கள் பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நடைபெற்ற பணியாளர் கூட்டம் |
|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி"- புளியடி | 9 |
| 2. | மனவளர்ச்சிகுன்றியோர் தொழிற்பயிற்சி மையம் – திருப்பதிசாரம். | 10 |
| 4. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம், ஆசாரிபள்ளம். | 9 |
| 5. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர், முட்டம் | 10 |
| | மொத்தம் | **38** |

**பணி மதிப்பீடு நடத்துதல்:**

ஒவ்வொரு மாதமும் திட்டமிட்ட பணிகளை ஒவ்வொரு திட்டத்தின் கீழும் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதைப்பற்றி ஆய்வு செய்யவும் திட்டமிட்ட பணிகளில் செய்து முடிக்காத பணிகளை எவ்வாறு செய்வது என்பதை பற்றி கலந்து ஆலோசிக்கவும் ஒவ்வொரு மாதமும் பணி மதிப்பீடும், பணி திட்டமிடுதலும் நடத்தப்பட்டது.

**"ஸ்பாஸ்டி" தொழிற் பயிற்சி மையம்,** புளியடியில் 9 பணிமதிப்பீடும் பணி திட்டமிடுதலும் நடத்தப்பட்டுள்ளது.

**மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம் –** திருப்பதிசாரத்தில் 10 பணிமதிப்பீடு மற்றும் பணி திட்டமிடுதல் நடத்தப்பட்டுள்ளது.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லம்** - ஆசாரிபள்ளத்தில் 9 பணி மதிப்பீடு மற்றும் பணி திட்டமிடுதல் நடத்தப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

'அன்பகம்' மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகரில் 10 பணிமதிப்பீடு மற்றும் பணி திட்டமிடுதல் நடத்தப்பட்டுள்ளது.

**இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பணிமதிப்பீடு கூட்டங்கள் பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நடைபெற்றபணி மதிப்பீடு கூட்டம் |
|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையம் - புளியடி. | 9 |
| 2. | மனவளர்ச்சிகுன்றியோர் தொழிற்பயிற்சி மையம் – திருப்பதிசாரம். | 10 |
| 3. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம், ஆசாரிபள்ளம். | 9 |
| 4. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர், முட்டம் | 10 |
| மொத்தம் | | 38 |

## 11. பிள்ளைகளை சுற்றுலா அழைத்து செல்லுதல்:

### 1. மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையம் - திருப்பதிசாரம்:

12-04-18 அன்று உதயகிரி கோட்டைக்கு நமது தொழிற்பயிற்சி மைய மாணவிகளை சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது.

26-04-2018 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழாவிற்கு நமது மாணவிகளை அழைத்து செல்லப்பட்டது.

09-09-2018 அன்று இராஜாக்கமங்கலம் துறைக்கு நமது மாணவிகளை சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது.

15-09-2018 அன்று அன்பகம் - முட்டம் மனநோயாளிகள் இல்ல ஆண்டு விழாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டது.

20-12-2018 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் விழாவிற்கு நமது மாணவிகளை அழைத்துச் செல்லப்பட்டது.

### ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம் - புளியடி:

12-04-18 அன்று நமது தொழிற்பயிற்சி மாணவர்களை உதயகிரி கோட்டைக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது.

Scanned with CamScanner

20-04-2018 அன்று திருப்பதிசாரம் தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழாவிற்கு நமது தொழிற்பயிற்சி மாணவர்களை அழைத்துச் செல்லப்பட்டது.

09-09-2018 அன்று இராஜாக்கமங்கலம் துறைக்கு, நமது தொழிற்பயிற்சி மாணவர்களை சுற்றுலா அழைத்து செல்லப்பட்டது.

15-09-2018 அன்று முட்டத்திற்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது.

22-09-2018 அன்று திருப்பதிசாரம் சிறப்பு பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்ற விளையாட்டு விழாவிற்கு நமது தொழிற்பயிற்சி மாணவர்களை அழைத்துச் செல்லப்பட்டது.

19-12-2018 அன்று திருப்பதிசாரம் தொழிற்பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்மஸ் விழாவிற்கு நமது 'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மாணவர்களை அழைத்துச் செல்லப்பட்டது.

## 12. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்:

புதிய பணியாளர்கள் வரும் போது அவர்களுக்கு நமது இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களை பராமரிப்பது எப்படி என்பது பற்றியும், நமது நிறுவனத்தின் நோக்கம் பற்றியும் பயிற்சிகள் அவ்வப்போது கொடுக்க பட்டுள்ளது.

## 13. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

10-11-2018 அன்று பார்வதிபுரம் RUC நிறுவனத்தில் வைத்து பெண்களுக்கான பாலியல் வன்கொடுமை தடுப்பு தினம் கொண்டாடுவது பற்றிய திட்டமிடுதல் கூட்டத்தில் திட்ட அலுவலர் செல்வி. விக்டோரியா அவர்கள் கலந்து கொண்டார்கள்.

24-11-2018 அன்று நாகர்கோவில் CPD Hall –லில் வைத்து நடைபெற்ற பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்பு தின பிரச்சார கூட்டத்தில் நமது நிறுவனம் சார்பில் திட்ட அலுவலர் செல்வி. விக்டோரியா அவர்களும் மற்றும் ஸ்பாஸ்டி பணியாளர் திருமதி. ஜோஸ்பின் ராணி அவர்களும், நல்ல சமாரியன் முதியோர் இல்ல பணியாளர் திருமதி. ராஜம்மா அவர்களும், நமது நன்கொடையாளர்கள் 2 பேர் கலந்து கொண்டார்கள்.

## 14. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க, பயிற்சி பெற செல்லுதல்:

18-02-2018 அன்று கடியப்பட்டணம் அன்பிய ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு மனவளர்ச்சி குறைவு, மனநோய் ஏற்படுவதற்கான காரணங்கள்

Scanned with CamScanner

மற்றும் தடுப்பு முறைகள், மறுவாழ்வு மற்றும் கார்டு நிறுவனத்தின் பணிகள் பற்றிய கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>இதர பணிகள்:</u>**

மாவட்ட ஊனமுற்றோர் நல அலுவலர் நமது நிறுவனத்தை பார்வையிட வந்துள்ளார்கள்.

**SMR:**

12-10-2018 மற்றும் 24-10-2018 ஆகிய இரு நாள்கள் திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தை பார்வையிட வந்துள்ளார்கள்.

**SPASTI:**

16-10-2018 அன்று நமது ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தை பார்வையிட வந்துள்ளார்கள்.

**GSHA:**

11-06-2018 அன்று DSW நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தை பார்வையிட வந்துள்ளார்கள்.

**ANBAHAM:**

11-06-2018, 23-10-2018 ஆகிய நாட்கள் DDRO நமது அன்பக பணிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

**<u>ஆதார் அட்டை வாங்குதல்:</u>**

இந்த ஆண்டு ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மைய மாணவர்கள் செல்வன். ரவி, செல்வன். பாபு, செல்வன். சீனு, செல்வன். ஜெயசிங், செல்வன். செந்தில்குமார், செல்வன். சரத்குமார், செல்வன். ரிக்கு செல்வன். ஆனந், செல்வன். கண்ணன், செல்வன். முத்து, செல்வன். ஷாகித் அன்வர் ஆகிய 11 பேருக்கு ஆதார் அட்டை வாங்கப்பட்டுள்ளது.

## <u>5. செய்து முடிக்காத பணிகள்:</u>

திட்டமிட்ட எல்லா பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

6. **திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்தவர்கள்:**

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், ஒருங்கிணைப்பாளர்கள், சிறப்புக்கல்வி ஆசிரியர்கள், முடநீக்கு பணியாளர்கள், உதவியாளர்கள், விடுதி பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள் ஆகியோர்கள் உதவியாக இருந்தார்கள்.

7. **எதிர்கால திட்டங்கள்:**

1. ஊனமுற்றோர்கள், முதியோர்கள் பெற்றோர்களை சந்தித்தல்.
2. விடுதியில் தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
3. மருத்துவ முகாம் நடத்துதல்
4. தொழிற்பயிற்சி கொடுப்பதை கவனித்தல்
5. பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்துதல்
6. ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்
7. நன்கொடை வசூலித்தல்
8. விழாக்கள் கொண்டாடுதல்
9. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்
10. பணியாளர் கூட்டம், பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
11. பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்
12. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்
13. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
14. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க, பயிற்சி பெற செல்லுதல்.

திருப்பதிசாரம்,
17-12-2019.

R. Victoria
திட்ட அலுவலர்
MISS. R. VICTORIA
PROJECT OFFICER
KARD
THIRUPATHISARAM P.O.
K.K.DIST.

திட்ட இயக்குனர்
Dr. S. Basil Rajan, Ph.D.,
PROJECT DIRECTOR,
KARD
THIRUPATHISARAM & P.O.,-629001.
KANYAKUMARI DISTRICT.



Scanned with CamScanner